# தொல்காப்பியம் சுட்டும் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள்

**முனைவர் பீ.பெரியசாமி,**

*தமிழ்த்துறைத்தலைவர்,*

*டி.எல். ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*

*விளாப்பாக்கம், இராணிபேட்டை மாவட்டம் -632521.*

*தமிழ்நாடு, இந்தியா.*

***ஆய்வுச்சுருக்கம்***

ஒழுக்கம், கல்வி, வீரம், ஈகை, சான்றாண்மை முதலிய நற்பண்புகளிலிருந்து வழுவாது அவற்றோடு ஒட்டி ஒழுகும் சான்றோர்களாலேயே இவ்வுலகம் நிலைபெற்ற வாழ்கின்றது. இத்தகைய நற்பண்புகள் பலவற்றையும் பெற்றுத் திகழும் முன்னோர்கள் தாம் படைத்த இலக்கிய, இலக்கணங்களில் இப்பண்புகளைப் பதியச் செய்து எதிர்கால மக்களும் பண்புடன் வாழ வழி வகுத்துள்ளனர். அவ்வகையில் தொல்காப்பிய பொருளதிகாரத்தில் பல பண்பாட்டு நிகழ்வுகளைக் காணமுடிகிறது. அப்பண்பாட்டின் அடிப்படையில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடும் போது வழிபாட்டு முறைகளில் நடுகல் வழிபாடு, கொற்றவை வழிபாடு, வெறியாட்டு வழிபாடு, அணங்கு வழிபாடு இவற்றில் வெறியாட்டு வழிபாடு இன்றும் நடைமுறையில் காணப்படுகிறது. அவற்றைப் பில்லிசூனியம், குறிகள் கேட்பது என மாறுபட்ட நிகழ்வாக இன்றைய நிலையில் காணலாம். விழாக்களில் நெய்யணி, பெருமங்கலம் என்னும் நிகழ்வுகள் இன்றும் நடைமுறையில் உள்ளன. இதில் பெருமங்கலம் என்பது இன்று அனைவராலும் கொண்டாடும் பிறந்தநாள் விழாவாகத் திகழ்கிறது. தொல்காப்பியத்தை மேலும் ஆய்வு செய்து தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பெரிதும் உறுதுணையாக அமையும் என்ற உறுதியாகக் கூறலாம்.

**முக்கிய வார்த்தைகள்**

தொல்காப்பியம், வாழ்வியல், மரபியல், அகத்திணையியல், புறத்திணையியல், பண்பாடு, நில பாகுபாடு, விழாக்கள், தொழில்.

**முன்னுரை**

ஒழுக்கம், கல்வி, வீரம், ஈகை, சான்றாண்மை முதலிய நற்பண்புகளிலிருந்து வழுவாது அவற்றோடு ஒட்டி ஒழுகும் சான்றோர்களாலேயே இவ்வுலகம் நிலைபெற்ற வாழ்கின்றது. இத்தகைய நற்பண்புகள் பலவற்றையும் பெற்றுத் திகழும் முன்னோர்கள் தாம் படைத்த இலக்கிய, இலக்கணங்களில் இப்பண்புகளைப் பதியச் செய்து எதிர்கால மக்களும் பண்புடன் வாழ வழி வகுத்துள்ளனர். அவ்வகையில் தொல்காப்பியர் தம் நூலில் சுட்டிச் சென்ற தமிழ்ப் பண்பாடுகள் ‘‘பண்பாட்டுச் சீர்மை‘‘ என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**பண்பாடு – சொல்லும் பொருளும்**

பண்பாடு என்ற சொல் பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் "பண்பு" என்ற சொல்லும், ***"பாடு"*** என்ற சொல்லும் தமிழ் இலக்கியங்களில் (கலித்தொகை-138, புறநானூறு-197, நற்றிணை-160) பயின்று வந்துள்ளன. மனிதனை விலங்கினின்றும் வேறுபடுத்துவது பண்பாடு ஆகும்.

**பண்பாட்டுச் சீர்மை**

சீர்மை என்னும் சொல்லுக்குச், ***"சிறப்பு, புகழ், கனம், அளவிற்படுகை, வழவழப்பு, சீமை, நன்னடை"*** (தற்காலத் தமிழ் அகராதி, பக்-69.) என்னும் பொருள்களை உரைக்கின்றது தமிழ் அகராதி. மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒழுக்க முறைகளைப் பின்பற்றியும் சிறப்பாகச் செய்ய வேண்டிய செயல்களை உணர்த்தும் நன்னடத்தையோடு செம்மையாக வாழ்வதே "பண்பாட்டுச் சீர்மை" ஆகும். அவ்வகையில் தொல்காப்பியம் சுட்டும் தமிழ்ப் பண்பாடுகளை இக்கட்டுரையின் மூலம் காண்போம்.

**வாழ்வியற் கூறுகள்**

மனித வாழ்க்கையில் இயல்பாக நடைபெறும் செயல்பாடுகளைப் பகுதிப்படுத்திக் கூறுவது வாழ்வியற் கூறுகளாகும். கூறு-பகுதி, கூறுபடுத்தல்-பகுதிபடுத்தல், நல்லன, தீயன இவையிவை என்பதைப் பகுத்துணர்ந்து, தீயனவற்றை நீக்கி, நல்லனவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுதலே சிறந்தது.

**மன உணர்வும் பண்பாடும்**

தமிழர்களுக்கும் மொழியாலே எவ்வாறு பண்பாடு உருவாகியதென்றால் மனிதன் மொழி அறிவைப் பெறுவதன் மூலம் வாழ்ந்த வாழ்க்கைக்கு மொழி அறிந்தபின் வாழும் வாழ்க்கைக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. மொழியே மனிதனை விலங்கினின்றும் பிற உயிர்களினின்றும் பிரித்து, பிறவற்றிற்கு இல்லாத ஓர் உணர்வு மனிதனுக்கு உண்டு என்பதைத் தொல்காப்பியர் காட்டுகின்றது.

**"ஒன்றறி வதுவே உற்றறிவதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே**
**ஐந்தற்றி வதுவே அவற்றோடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றோடு மனனே"(தொல். மர. 27)**

கண்டு கேட்டு உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல அறிவுகளுடன் அவைபோல் புறத்தே புலப்படாததாய் உள்ள மன உணர்வை ஆறாவது அறிவாகக் காட்டுவர். இந்த மன உணர்வைக் காட்டுவதுவே மொழி. அந்த உணர்வில் பண்பாடு தோன்றுகிறது. அதாவது ஓரறிவுடைய

உயிர்களிடத்தும் மக்கள் கருணை காட்ட வேண்டும் என்ற பண்பாடு புலனாகிறது. அதனால்தான் "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று இராமலிங்க வள்ளலார் பாடினார் போலும்.

**மரபியலில் பண்பாடு**

ஓரறிவுயிர்களாகிய புல், மரம் முதலியன தொடங்கி விலங்கு பறவை ஆகியவற்றின் பெயர்களையும் அவற்றின் இளமை நிலையில் உள்ளவற்றின் பெயர்களையும் பிறவற்றையும் பிரித்துப் பிரித்துக் காட்டும் போது விலங்குகளில் ஆண் பெண் வேறுபாட்டையும், மரத்துக்கும் புல்லுக்கும் உள்ள வேறுபாட்டையும் தொல்காப்பியர் மரபு நிலைகளையும் விளக்கி அவ்வழி வரும் பண்பாட்டை மாற்ற நினைப்பவருக்கும்,

**"மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" (தொல். மர.-88)**

என்பது அவர் வாக்கு. இவ்வாறு மரபுவழி "நான் வாழமாட்டேன்" என்று யாராவது சொல்வார்களாயின் அவர்கள் நிலை கெடுவர் என்பதை விளக்கி, அவர்கள் வாழ்க்கை சமுதாயத்துக்குகேடு பயக்கும் என்பதையும் காட்டி அத்தகையவர் வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் என்ன என்பதைக் குறித்துப் பல உண்மைகளை இதில் விளக்கியுள்ளார். மேலும் மரபு நிலையில் திரிகின்றவர்கள் இழிமக்களே ஆவர் உயர் மக்களென்பவர் மரபு நிலையில் திரியாதவர்கள் என்ற வாழ்வியல் நெறியை தொல்காப்பியர்,

**"வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட்டாகலான" (தொல்.மர-95)**

எனக் குறிப்பிடுகின்றார். மேலும் தொல்காப்பியர் வழிநூலுக்குரிய மரபுணர்த்தும் போது ஒரு மகிப் பெரிய வாழ்வியல் நெறியைப் புலப்படுத்துகிறார். இவ்வாறு தொல்காப்பியர் வெறுமனே எழுத்துக்கும் சொல்லுக்கும் பொருளுக்கும் மட்டும் இலக்கணம் கூறியதோடு அமையாமல் அதன் மூலம் சமுதாயம் வாழ வேண்டிய பண்பாடுகளைக் காட்டியதோடும் அமையாமல் அவற்றிற்கெல்லாம் அடிப்படையாகிய இந்த உலகத்தோற்றத்தைக் கூறி, இதில் மக்கள் வாழ வேண்டிய இலக்கண அமைதியையும் காட்டி, வாழ்வாங்கு திரிபின்றி வாழ்வதே வாழ்க்கை என்பதை,

**"நிலம் நீர் தீ வளி விசும்போ டைந்தும்**
**கலந்த மயக்கம் இவ்வுலகம் ஆதலன்**
**இருதிணை ஐம்பால் இயல் நெறி வழா அமைத்**
**திரியில் சொல்லோடு தாழாஅல் வேண்டும்" (தொல்.மர-86)**

இச்சூத்திரங்கூறி, அதிலிருந்து இலக்கிய மரபு கெடாது அவை காட்டிய – காட்டுகின்ற – காட்டும் – பண்பாடு கெடாது மனிதன் வாழத் தொடங்க வேண்டும் என்கிறார். அவ்வாறு வாழ முயலுவதே அவன் தன்னை வளர்த்த மொழிக்குச் செய்யும் கடமையாகும்.

**அகத்திணைப் பாகுபாடு**

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**

**முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (தொல். நூற்-947)**

எனக் குறிப்பிடும் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை எனப்பட்ட ஏழும் அகத்திணை பாகுபாடாகும். திணை ஏழாயினமைக்கு உண்மையான காரணம் ஏழுவகைக் காதல் ஒழுக்கங்களாகும். காதல் ஒழுக்கங்களை இலக்கணம் உரிப்பொருள் என வழங்கும் இவ்வொழுக்கங்கள் தனிநிலை கொண்டவை; தம்முள் தொடர் வேண்டி நில்லாதவை. ஆதலால்தான் குறிஞ்சி முதலிய ஐந்தும் ஒத்த காமத்தன்மையால் ஒன்றாயினும் ஐந்திணை எனத் தனிநிலை குறிக்கும் என்று பெயர் பெற்றன என்ற கூறுவர்.

**அகத்திணைப் பண்பாடு**

**"மக்கள் நுதலிய அகணைந் திணையும்**

**சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்" (தொல்.நூற்.1003)**

இந்நூற்பா அகப்பாட்டின் இலக்கணமாகத் தொல்காப்பியர் கூறுகின்றது. அகப்பாடலில் தலைவன், தலைவி பெயர் சுட்டிக் கூறக்கூடாது என்பது அகப்பாடலின் உயிரான இலக்கணமாகும். காதலர்கள் நல்ல ஒத்த அன்புடையவர்களின் பெயர் கூறின் குறைவு பட்டுவிடும் என்றுணர்ந்து மக்கள் பெயர் தாங்கி வரும் காதல், காதற்பாட்டு ஆகுமேயன்றி "அகம்" என்ற பாடலாகாது. அகப்பாடல் பொதுவானது, தலைவி தன் காதலன் பெருமையைக் கூறும் போது,

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**

**நீரினும் ஆரள வின்றே சாரல்**

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**

**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்.3)**

எனத் தன்னுடைய காதலின் அளவைக் கூறமுடியா நிறையுடையது என்பதை இப்பாடலால் அறியலாம். இதிலிருந்து அகப்பாட்டு என்பதே அன்பின் ஐந்திணை பற்றிய பாட்டு என்று பொருள் கொள்ள வேண்டியுள்ளது. சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையின ஐந்திணைப் பாடல்களாகும். அவை முதல், கருப்பொருள்களில் அடியொற்றித் திணை, துறை பெற்றவரும். ஐவகை நிலங்களை, அடியொற்றி ஐவகை உரிப்பொருட்களைத் தமக்கு உயிராகக் கொண்டு வரும். ஐந்திணைப் பாடல்களில் பாட்டுடைத்தலைவன் பெயர்வரினும் கிளவித் தலைவன் பெயர் இயற்பெயர் வரப்பெறாது.

**முதற்பொருள்**

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குவது முதற்பொருள் ஆகும். நிலம், பொழுது என்னும் அவ்விரண்டு இயல்புகளே இன்பத் தோன்றுவதற்கு அடிப்படையான காரணங்களாய் இருக்கின்றன. நிலமுதற்பொருள், காலமுதற்பொருள் என இருவகையாகும் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதனை,

**"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்**

**இயல்பு எனமொழிப இயல்பு உணர்ந்தோரே” (தொல்.நூற்.950)**

என்னும் நூற்பாவால் அறியமுடிகிறது. ஒரு செயல் இயல்பாக நடைபெறுவதற்கு இடமும், காலமும் இன்றியமையாதவை. இதனை,

**“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**

**கருதி இடத்தாற் செயின்” (குறள்-484)**

என்ற குறள் விளக்குகின்றது. இவ்வின்றியமையாமை கருதியே நிலமும், காலமும் முதற்பொருள் எனத் தொல்காப்பியரால் வழங்கப்பட்டன என்பது கருதத்தக்கதாகும்.

**முப்பொருள் பாகுபாடு**

தொல்காப்பியர் உலகிலுள்ள பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகைப்படுத்தி இலக்கணம் கூறுகின்றார். இதனை,

**“முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நுவலும் காலை முறை சிறந்தனவே**

**பாடலுள் பயின்றவை நாடும் காலை (தொல்.நூற் 949)**

எனத் தெளிவுபடுத்துகிறார். இதில் முதற்பொருளையும் கருப்பொருளையும் விளக்கி இவர் அகத்திற்குரிய பண்பாட்டைத் தெளிவாகச் சுட்டுகிறார் தொல்காப்பியர்.

**நிலம்**

ஓரறிவுள்ள நெல் முதல் ஆறறிவுள்ள மனிதன் வரை அனைத்து உயிரினங்களும் உலகில் நிலைபெற்று வாழ்வதற்குக் காரணமாக அமைவன நிலங்களாகும். ஐம்பூதங்களில் ஒன்றாகத் திகழும் நிலத்தை அக்கால மக்கள் நான்கு வகையாகப் பாகுபடுத்தினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களின் தன்மைக்கேற்பத் தங்கள் வாழ்க்கையை அமைத்து கொண்டனர். பாலை என்னும் நிலம் தமிழகத்தில் காணப்பெறவில்லை. முல்லையும், குறிஞ்சியும் திரிந்த பகுதியே பாலை என்று அழைக்கப்பெறுகிறது.

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து**

**நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்**

**பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்”(சிலம்பு. காடுகாண். 64-66)**

என்னும் சிலப்பதிகாரப் பாடலடிகள் தமிழகத்தில் நானிலமே காணப்பெறுகின்றன என்கின்றது. இயற்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நிலங்களுக்குப் பெயரிட்டனர். காட்டுப் பகுதியில் வாழ்ந்தோர் தாங்கள் வாழும் பகுதிக்கு முல்லை என்றும் மலைசார்ந்த பகுதியில் வாழ்ந்தோர் குறிஞ்சி என்றும், வயல் சார்ந்த பகுதியில் வாழ்ந்தோர் மருதம் என்றும், கடல்சார்ந்த பகுதியில் வாழ்ந்தோர் நெய்தல் என்றும் தாங்கள் நிலங்களுக்குப் பெயரிட்டனர். இதனை,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்**
**சொல்லிய முறையான சொல்லவும் படுமே’ (தொல்.நூற் 951)**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். பண்டைத் தமிழர்கள் நிலத்தை இவ்வாறு நான்கு வகையாகப் பிரித்தனர். இந்தக் காரணத்தாலேயே உலகத்திற்கு நானிலம் என்ற பெயரும் எழுந்தது. நான்கு வகையாக நிலம் நானிலம் எனப்பட்டது. பாலை தனி நிலமன்று, மழையின்றி நீரின்றி வறட்சியும் கதிரவன் கொடுமையும் எந்த நிலத்தில் காணப்பட்டாலும் அப்பகுதிப் பாலை நிலமாகும். இக்காரணத்தால்தான் பாலைக்குத் தனி நிலமும், தனித்தெய்வமும் தொல்காப்பியரால் குறிக்கப் பெறவில்லை. இதனை,

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் --**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்” (சிலம்பு.11-64-67)**

என்ற சிலப்பதிகார அடிகள் புலப்படுத்தும். எனவே தமிழ் நூல்கள் தமிழகத்தை “நானிலம்“ என்றே குறிப்பிடுகின்றன.

**பொழுது**

நிலத்தை ஐவகையாகப் பிரித்ததைப் போன்று பொழுதையும் பெரும்பொழுது, சிறுபொழுது என்று பிரித்தனர். முதற்பொருளின் மற்றொரு பகுதியாகிய காலம், பெரும்பொழுது, சிறுபொழுது எனப் பகுக்கப்படுகிறது. ஏனைய பொருள்களை நேரடியாக அளப்பதைப் போலக் காலம் என்பதை நேரடியாக அளக்க முடியாது இதனை வள்ளுவர்,

**“நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
**வாளதுணர் வார் பெறின்” (குறள்-334)**

என நாளின் தன்மையைக் கூறியுள்ளார். தொல்காப்பியர் பெரும் பொழுது ஆறு என்பது பற்றிய தொகைச் சூத்திரம் செய்யவில்லை. அவற்றின் பெயரைத் தனித்தனி நூறுபாக்களினால் தான் குறிப்பிடுகின்றார். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகியவை பெரும்பொழுதுகளாகும். இதனைத் தொல்காப்பியர்.

**“காரும் மாலையும் முல்லை” (தொல். நூற்-952)**

**“குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்” (தொல்.நூற்-953)**

கார்காலமும் அதன் மாலைக்காலமும் முல்லையொழுக்கத்திற்கு உரியக் காலமாகும். “கார்” என்பது மழைப்பருவம். அஃது ஆவணி, புரட்டாசித் திங்கள் கொண்டது. ”கூதிர்” என்பது குளிர்காலம். அஃது “ஐப்பசி, கார்த்திகை என்னும் இருதிங்கள் கொண்டது. முன்பனிக்காலம் மார்கழி, தை என்பவற்றை உள்ளடக்கியது. பின்பனிக்காலம் மாசியும், பங்குனியும் உள்ளிட்டது. சித்திரையும் வைகாசியும் கொண்ட காலப்பகுதி இளவேனில், ஆனியும், ஆடியும் முதுவேனில் காலமாகும்.

சிறுபொழுது ஆறு என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். அவை வைகறை, விடியல், ஏற்பாடு, நண்பகல், மாலை, யாமம் என்பனவாகும். முல்லைக்கு மாலையும், குறிஞ்சிக்கு யாமமும், மருதத்திற்கு விடியலும், நெய்தலுக்கு ஏற்பாடும், பாலைக்கு நண்பகலும் சிறுபொழுதுகளாகும். இதனைத் தொல்காப்பியர்,

**“வைகறை விடியல் மருதம்” (தொல்.நூற்-955)**

**“ஏற்பாடு நெய்தல் ஆதல மெய்பெறத் தோன்றும்” (தொல் நூற்-956)**

**“நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு” (தொல். நூற்-957)**

இவையே சிறுபொழுதுகளுக்குரியன.

**கருப்பொருள்**

முதற்பொருளிலிருந்து தோன்றுவது கருப்பொருளாகும். அஃது இடத்திலும் காலத்திலும் தோன்றும். உயிருள்ள மற்று உயிரற்றப் பொருள்களும் நிலங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றிலிருந்து தோன்றுவதால் கருப்பொருள் எனப் பெயர் பெற்றன. தெய்வம், உணவு, மக்கள், விலங்கு, தொழில், பறவை, யாழ் முதலியவற்றை அக்கால மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களாகக் கொண்டனர். மேலும், விலங்கு, மரம், இசை, பூ, பறவை முதலிய செயல்களை மேற்கொண்டு பண்பாட்டுச் சீர்மையுடன் வாழ்ந்தனர் என்பதைத் தொல்காப்பியர்,

**“தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,**

**அவ் வகைப் பிறவும் கரு என மொழிப” (தொல். நூற்-956)**

என்ற நூற்பாவால் அறியலாம். ஒவ்வொரு நிலத்தின் இயற்கையையும், அங்குள்ள மக்களின் வாழ்க்கையையும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளையும், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று பகுதிகளாக்கி கூறுகின்றார் தொல்காப்பியர். இம்மூன்றினுள் கருப்பொருள்தான் முதன்மையானதாகும்.

**குடிப்பெயரும், தொழிற்பெயரும்**

தாங்கள் வாழும் இடம், காலம், சூழல் ஆகியவற்றிற்கேற்ப வாழ்ந்த மக்கள் அவ்வந்நிலத்திற்கு ஏற்பத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். அவ்வாறு அமைத்துக் கொண்டது மட்டுமன்றித்

தங்களின் பெயர்களையும் குடிப்பெயருக்கேற்பவும், தாங்கள் செய்யும் தொழிலுக்கேற்பவும் அமைத்துக் கொண்டனர். மேலும் தங்கள் வாழும் நிலத்திற்கேற்பவும் தலைமக்கள் தங்கள் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். முல்லை நிலத்தில் வாழ்வோர் ஆயர், வேட்டுவர் எனப் பெயர் கொண்டனர்.இதனை,

**“பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய**

**திணைதோறும் மரீஇய, திணை நிலைப்பெயரே” (தொல். அகத்.22)**

என்றும்,

**“ஆயர், வேட்டுவர், ஆடூ உத்திணைப் பெயர்,**

**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே” (தொல். அகத்.23)**

என்றும்,

**“ஏனோர் மருங்கினும் எண்ணும் காலை,**

**ஆனா வகைய – திணை நிலப்பெயரே” (தொல். அகத்.24)**

என்னும் நூற்பா மூலம் இன்றும், குடிப்பெயர்களாலும் முன்னோர்களின் பெயர்களாலும் அவ்வக் குல தெய்வங்களின் பெயர்களாலும் பெயரிடும் வழக்கம் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

**உரிப்பொருள் பாகுபாடு**

உரிப்பொருளைத் தமிழர்கள் ஐந்து பகுதியாகப் பிரித்துக் காட்டியிருக்கின்றனர். ஐந்து திணைக்கும் தனித்தனியாக ஐந்து வகையான ஒழுகத்தினை வரையறைச் செய்திருக்கின்றனர். திணை என்ற சொல்லுக்கே ஒழுக்கம் என்ற பொருள் உண்டு. ஐந்து வகையான ஒழுக்கத்தைத் தொல்காப்பியர்,

**“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**

**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**

**தேரும் காலை, திணைக்கு உரிப்பொருளே” (தொல்.நூற்-962)**

என்ற நூற்பாவால் குறிப்பிடுகின்றார்.

**தாயின் அன்புடைமை**

தன் வருத்தத்தைப் பொருட்படுத்தாது, தன் சேயின் நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்பவர் தாய். அத்தகையவள் தன்மகள் தவறு செய்தபோது சில நேரங்களில் பொறுத்தும் நல்வழிப்படுத்துகின்றாள்.

**“தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை”(கொன்றைவேந்தன், பா.38)**

என்னும் வரி நமக்கு உணர்த்தும்.

**தன்னலம் கருதாப் பண்புடைமை**

ஈகைப் பண்பில் சிறந்து விளங்கிய தமிழ் மக்கள் தன்னலம் கருதாப் பண்புடையோராயும் விளங்கினர். தான் பெற்ற இன்பம் இவ்வுலகில் உள்ள அனைவரும் பெறவேண்டும் என்னும் எண்ணம்

உடையோராய்த் திகழ்ந்தனர். கூத்தர், பாணர், பொருநர், விறலியர் முதலியோர் தங்களுக்குக் கிடைத்த பரிசுப்பொருள்களைத் தாம் மட்டுமே அனுபவிக்க விரும்பாது பிறரும் பெறவேண்டும் என்று விரும்பினர். இதனை

**"கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி,**

**பெற்ற பெருவளம் பெறா் அர்க்கு அறிவுறீஇ,**

**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"(தொல். புறம்.30)**

என்னும் நூற்பா சுட்டுகின்றது.

**நன்றி மறவாப் பண்புடைமை**

நன்றி மறவாமை என்னும் பண்புத் தமிழருக்கு உரியப் பண்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள்.110)**

என்னும் திருக்குறளுக்கேற்ப, வறுமையுற்றக் காலத்தில் ஒருவரால் பெற்ற உதவியைத் தாம் செழிப்பற்றக் காலத்திலும் மறவாது எண்ணி மகிழ்வுறும் நிலை மனிதர்களிடையே காணப்பெறுகிறது. அவ்வகையில் அச்செயலைத் தாமே நினைத்துப் பார்ப்பதோடன்றி, பிறரிடமும் எடுத்துக்கூறி, பிறர் மனத்திலும் நன்றிமறவாப் பண்பை நிலைநிறுத்த செய்துள்ளது தொல்காப்பியம். இதனை,

**''நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவு ஆகும்" (தொல். அகம்.46)**

**''நிகழ்ந்தது கூறி நிலையிலும் திணையே"(தொல். அகம்.47)**

என்னும் நூற்பாக்களின் வழி அறியலாம். ஒருவரிடம் பரிசு பெறுவதற்கு முன் அவர் புகழைக் கூறுவதோடன்றி, பெற்ற பின்னரும் அவரின் பண்பு நலன்களை எடுத்துரைத்துச் சிறப்பிப்பதே சிறந்த பண்பாக அமையும். இதனை,

**''பெற்ற பின்னரும் பெரு வளன் ஏத்தி" (தொல். புறம்.30)**

என்னும் நூற்பாவால் அறியலாம்.

**வழிபாட்டு முறைகள்**

தொல்காப்பியர் காலத்திலேயே தெய்வ நம்பிக்கைகள் இருந்தாக அறியப்படுகிறது இதனை,

**"கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்" (தொல்.கற்.9)**

என்ற தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தெய்வக்கடன் என்றும், நேர்த்திக் கடன் என்றும் வேண்டுவது இன்றும் நடைமுறையில் உள்ளது. தெய்வ நம்பிக்கைகளும், வழிபாடுகளும் பண்பாட்டின் அடிப்படையில் அமைகின்றன. இதன் அடிப்படையில் வெறியாட்டு வழிபாடு, கொற்றவை வழிபாடு, நடுகல் வழிபாடு, அணங்கு வழிபாடுகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**வெறியாட்டு வழிபாடு**

முருகன் கடவுளின் முன் வேலன் ஆவேசமான ஆடும் ஆட்டத்தை "வெறியாட்டு" என்று கூறுவர். வெறியாட்டு என்னும் வழிபாட்டினைத் தொல்காப்பியர்,

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**

**வெறியாட்டு அயர்ந்த காந்தளும்" (தொல்.புறம்-5)**

என்று குறிப்பிடுகிறார். களவுக் காலத்தில் தலைவனைப் பிரிந்த தலைவியின் உடல் வேறுபடும் போது பெற்றோர்கள் வேலன் என்னும் மந்திரக்காரனை அழைத்து மகள் நோய்க்குக் காரணம் யாது எனக்கேட்கும் நிலையைத் தொல்காப்பியர் குறிப்பிடுவதால், அக்கால மக்களிடம் இவ்வகை வழிபாட்டுமுறை இருந்ததை அறியமுடிகிறது.

**கொற்றவை வழிபாடு**

கொற்றவை பாலை நிலத்திற்குரிய தெய்வமாகச் சுட்டப்படுகிறது. கொற்றவையைப் பழங்கால மக்கள் வழிபட்டு வந்தனர். இதனைத் தொல்காப்பியர்,

**"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த**

**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே" (தொல்.புற-4)**

என்கிறார். போரிலே வெற்றி பெற்ற போர் மறவர்கள். பலியிட்டு வணங்கும் முறையே கொற்றவை நிலை என்கிறது தொல்காப்பியம். போரின் வெற்றிக்குக் கொற்றவையே காரணம் என்று நம்பினர்.

**நடுகல் வழிபாடு**

போரில் இறந்த வீரர்களுக்குக் கல் வைத்து வணங்கும் பழக்கம் பண்டைத் தமிழகத்தில் நிலவியது. இதை நடுகல்வழிபாடு என்பர். இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடும் போது,

**"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**

**சீர்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று**

**இரு மூன்று மரபின் கல்லொடு புணரச்**

**சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே" (தொல்.புற-5)**

என்கிறார். இவ்வழிபாடு ஆறுமுறைகளில் பின்பற்றப்பட்டுள்ளது.

1. காட்சி கல்லைத் தேர்ந்தெடுத்தல்
2. கால்கோள் தொடக்கவிழா
3. நீர்ப்படை கல்லை நீராட்டுதல்
4. நடுகல் கல்லை நடுதல்
5. பெரும்படை வீரர்கள் மரியாதை செய்தல்
6. வாழ்த்தல் கல்லை வணங்குதல்

வீரத்தைப் போற்றும் பண்பு பண்டைய தமிழகத்தில் மிகுதியாக இருந்தது. அதே நேரத்தில் ஆவிகளுக்கு அஞ்சும் அச்சமும் சமூகத்தில் காணப்பட்டது. இவ்விரண்டு பண்புகளும் சேர்ந்தே அக்கால “நடுகல் வழிபாடு“ தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

**குடை, வாள் வழிபாடு**

அரசன் மக்களுக்கு நல்லாட்சி புரிவதற்குக் காரணமான வெண்கொற்றக்குடையையும், மறச் சின்னமான வெற்றி வாளையும் உலாவர செய்த மக்கள் அனைவரும் வழிபட்டனர் என்பதனை,

**“குடையும், வாளும் நாள்கோள் அன்றி” (தொல்.புற.67)**

என்கிறார் தொல்காப்பியர்.

**அணங்கு வழிபாடு**

தொல்காப்பியர் அச்சத்திற்குரிய மெய்ப்பாட்டிற்கு அணங்கு, விலங்கு, கள்வர், இறை என்னும் நான்கு காரணங்களைக் குறிப்பிடுகிறார். இதனை,

**“அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே” (தொல்.மெய் 8)**

அணங்கு காண்பாரை வருத்தும் உரு என்கிறார் தொல்காப்பியர். எனவே பெண்தெய்வம் என்ற அடிப்படையில் அணங்கு வழிபாடு இருந்துள்ளதை அறியமுடிகிறது.

**விழாக்கள்**

தொல்காப்பியர் காலத்தில் மக்கள் பல நிகழ்வுகளின் அடிப்படையில் விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர். அவ்வகையில் பெருமங்கலம், மண்ணுமங்கலம், வாள்மங்கலம், நெய்யணிப் போன்றவற்றை விழாக்களாகச் சிறப்பித்துள்ளனர்.

**பெருமங்கலம்**

பெருமங்கலம் என்பது பிறந்த நாள் விழாவாகும். மன்னர்களின் பிறந்தநாள் விழாக் குறிப்பிடத்தக்க ஒன்று. தொல்காப்பியத்தில்,

**“சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்**
**பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்” (தொல்.புற-86)**

என்ற நூற்பாவில் பெருமங்கலம் என்ற சொல் பிறந்தநாளைக் குறித்து வருகின்றது. அன்றைய காலகட்டத்தில் மன்னர்களின் பிறந்தநாளை விழாவாக மக்கள் சிறப்பித்துள்ளதைத் தொல்காப்பியம் வழி அறிய முடிகிறது.

**மண்ணுமங்கலம்**

மண்ணுமங்கலம் வெற்றியைக் குறிக்கும் நீராட்டு விழாவாகக் குறிப்பிடப்படுகிறது.

**“இகல்மதில் குடுமிக்கொண்ட மண்ணு மங்கலமும்”(தொல்.புற-67)**

மதில் உச்சியைக் கைப்பற்றிய வெற்றியை விழாவாகக் கொண்டாடினர்.

**“மன்எயில் அழித்த மண்ணு மங்கலமும்” (தொல்.புற-86)**

பகைவர்களது கோட்டையை அழித்து அவ்விடத்தில் நீராட்டு விழாச் செய்து வெற்றியைக் கொண்டாடினர்.

**வாள்மங்கலம்**

**“வென்ற வாளின் மண்ணொடு” (தொல். புற-67)**

**“மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்” (தொல்.புற-86)**

என்ற நூற்பாக்களின் வழியே வெற்றிக்கு உதவிய வாளுக்கு விழா எடுப்பது, வாள்மங்கலம் என்னும் போது வாளினை நல்லநாளில் நீராட்டும் நிகழ்வினையும் ஒரு பெரும் விழாவாகக் கொண்டாடினர் என்ற செய்தியும் இடம்பெறறுள்ளது.

**நெய்யணி**

**“புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்**
**நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி” (தொல். கற்-5)**

என்ற நூற்பாவின் மூலம், குழந்தை பெற்ற தாய்க்கு எண்ணெய் நீராட்டல் நிகழ்ச்சியை அறியலாம். இஃது அப்பெண்ணின் தாய்மாமனால் செய்யப்படும் இந்நிகழ்வினை விழாவாகக் கொண்டாடினர். ”குழந்தைப் பிறந்த பதினாறாம் நாள் நடத்தப்படும் சடங்குகளில் முதலில் குழந்தைப்பெற்ற பெண்ணைக் குளிப்பாட்டும் நிகழ்ச்சியே நெய்யணி மயக்கம்“ எனச் ச.வே.சுப்பிரமணியன் உரை தருகிறார்.

**முடிவுரை**

தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் பல பண்பாட்டு நிகழ்வுகளைக் காணமுடிகிறது. அப்பண்பாட்டின் அடிப்படையில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடும் போது வழிபாட்டு முறைகளில் நடுகல்வழிபாடு, கொற்றவைவழிபாடு, வெறியாட்டு வழிபாடு, அணங்குவழிபாடு இவற்றில் வெறியாட்டு வழிபாடு இன்றும் நடைமுறையில் காணப்படுகிறது. அவற்றைப் பில்லிசூனியம், குறிகள் கேட்பது என மாறுபட்ட நிகழ்வாக இன்றைய நிலையில் காணலாம். விழாக்களில் நெய்யணி, பெருமங்கலம் என்னும் நிகழ்வுகள் இன்றும் நடைமுறையில் உள்ளன. இதில் பெருமங்கலம் என்பது இன்று அனைவராலும் கொண்டாடும் பிறந்தநாள் விழாவாகத் திகழ்கிறது. தொல்காப்பியத்தை மேலும் ஆய்வு செய்து தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பெரிதும் உறுதுணையாக அமையும் என்ற உறுதியாகக் கூறலாம்.

**துணைநூற் பட்டியல்**

1. இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம் (பொருளதிகாரம்), கழக வெளியீடு, சென்னை.பதி.1967.
2. பரிமேலழகர்(உரை), திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. பதி.1975.

3. நச்சினார்க்கினியர் (உரை), கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை. பதி.1978.

4. குருநாதன் (ப.ஆ), புறநானூறு, வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்-4. பதி.2003.

5. புலியூர்கேசிகன், நற்றிணை, உமா பதிப்பகம், சென்னை. பதி.2013.

6. தமிழண்ணல் (உரை), குறுந்தொகை, முல்லை நிலையம், சென்னை. பதி.2002.

7. வேங்கடசாமி நாட்டார். ந.மு. (உரை), கொன்றைவேந்தன், சாரதா பதிப்பகம், சென்னை. 2007.

8. தற்காலத் தமிழ் அகராதி

9. மாணிக்கவாசகன். ஞா (உ.ஆ),சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை. பதி.2012.

## ஆசிரியர் குறிப்பு



**முனைவர் பீ.பெரியசாமி,**
*தமிழ்த்துறைத்தலைவர்,*
*டி.எல். ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*விளாப்பாக்கம், இராணிபேட்டை மாவட்டம் -632521.*
*தமிழ்நாடு, இந்தியா.*